**செ. கு. எண்: 041** **நாள்: 11.03.2018**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி** K. **பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 11.3.2018

தேனி மாவட்டம், போடி வட்டம், குரங்கணி மலைப்பகுதியில் திடீரென ஏற்பட்ட காட்டுத் தீயில், மலை ஏற்றம் சென்றவர்கள் சிக்கியுள்ளனர் என்ற செய்தியை அறிந்து நான் மன வேதனை அடைந்தேன்.

இந்தத் தகவல் கிடைக்கப்பெற்றவுடன், மலைப்பகுதியில் சிக்கியவர்களை பத்திரமாக மீட்க அதிகாரிகளுக்கு நான் உத்தரவிட்டேன். எனது வேண்டுகோளுக்கிணங்க மாண்புமிகு துணை முதலமைச்சர், மாண்புமிகு வனத்துறை அமைச்சர், வனத் துறை உயர் அலுவலர்கள், மாவட்ட ஆட்சியர், காவல் துறை கண்காணிப்பாளர், மாவட்ட வன அலுவலர் உள்ளிட்டோர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்பு நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகின்றனர்.

மலைப்பகுதியில் சிக்கியவர்களை மீட்பதற்கு ஏதுவாக தீயணைப்பு வாகனங்கள், ஆம்புலனஸ் ஆகியவை பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. எனது உத்தரவின் பேரில், போர்க்கால அடிப்படையில் மீட்புப் பணியை மேற்கொள்ள அருகிலுள்ள மாவட்டங்களிலிருந்து தீயணைப்பு துறையினர், வனத் துறையினர், வருவாய் துறையினர் மற்றும் காவல் துறையினர் தேவையான உபகரணங்களுடன் சம்பவ இடத்திற்கு அனுப்பப்பட்டுளளனர்.

மீட்புப் பணிகளை துரிதமாக மேற்கொள்ள மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சகத்திடமிருந்து, தமிழ்நாடு அரசு ஹெலிக்காப்டர்களை கோரியுள்ளது. மாண்புமிகு அம்மாவின் அரசு மீட்பு நடவடிக்கைகளை தொடர்ந்து போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளும்.

K. **பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**